**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 226/2024 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | மணி |
| Husband Name | : | மணி |
| Village | : | வெள்ளத்தான் கரைப்புதூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 60 |

All accused are present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது வெள்ளத்தான் கரைப்புதூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 13.05.2024 ஆம் தேதியன்று காலை 11.30 மணியளவில் நான் காட்டில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது எங்களது வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர்கள் எங்களது வீட்டின் பூட்டை உடைப்பதாக சத்தம் போட்டார்கள். நான் சென்று பார்த்தேன். அப்போது எனது வீட்டின் உள்ளே இருந்த பீரோவில் வைத்திருந்த ரூ.1,30,000/– யை மூன்று நபர்கள் வீட்டின் பூட்டை உடைத்து திருடிச்கொண்டு செல்வதாக பக்கத்து வீட்டுக்கார்கள் என்னிடம் சொன்னார்கள். பின்னிட்டு நான் எனது மகன், மகள் மற்றும் மருமகளுக்கு தகவல் சொன்னேன். பின்னர் வெள்ளகோவில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கைரேகை என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

பணம் காணாமல் போனதாக புகார் கொடுக்கப்பட்ட நிலையில் அதில் எத்தனை 100, 200, 500 ரூபாய் நோட்டுகள் இருந்தது என்று குறிப்பிட்டு கூறிவில்லை என்றால் சரிதான். எனது வீட்டைச் சுற்றி காம்பவுண்ட் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் உள்ளே செல்ல காம்பவுண்ட் சுவரின் வடபுறமும், தென்புறமும் கேட் உள்ளது என்றால் சரிதான். கதவு எந்த திசையில் உள்ளது என்றால் கிழக்கு திசையில் உள்ளது.

கதவை உடைத்துக்கொண்டதாக கூறியுள்ள நிலையில் எந்த கதவை உடைத்திருந்தார்கள் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் இரண்டு கதவையும் உடைத்திருந்தார்கள். சம்பவத்திற்கு பின்னிட்டு போலீசார் வந்து வீட்டின் பூட்டை எடுத்துக்கொண்ட சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். உடைந்த கதவு, பீரோவை போலீசார் போட்டோ எடுத்துக்கொண்டார்களா என்றால் எடுத்துக்கொண்டார்கள். கைரேகை நிபுணர் மூலம் கைரேகையை பதிவு செய்தார்களா என்றால் பதிவு செய்தார்கள். புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான். எனது மருமகன் எழுதிக் கொடுத்ததாக கூறினார். யார் புகாரை எழுதினார் என்று நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் புகாரில் மூன்று நபர்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். சாட்சிகள் பாலுசாமி மற்றும் பிரதீப்குமார் எனது உறவினர் என்றால் சரிதான். சாட்சி பாலுசாமி எனது மருமகன் ஆவார். எனது புகாரில் எதிரியின் அங்க அடையாளம் குறித்தும், இருசக்கர வாகனம் குறித்தும் கூறியுள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கினை விரைவாக முடிக்க வேண்டி புகாரினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ததற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.26 19:05:34 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 226/2024 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | பாலுசாமி |
| Husband Name | : | சவுந்தர்ராஜன் |
| Village | : | வெள்ளகோவில் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 45 |

All accused are present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது வெள்ளகோவிலில் குடியிருந்து வருகிறேன். கடந்த 13.05.2024 ஆம் தேதியன்று காலை 11.30 மணியளவில் எனது மாமியார் காட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது அவரது வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர்கள் எனது மாமியார் வீட்டின் பூட்டை யாரோ உடைப்பதாக சத்தம் போட்டதாகவும், அப்போது எனது மாமியார் சென்று பார்த்போது அவரது வீட்டின் உள்ளே இருந்த பீரோவில் வைத்திருந்த ரூ.1,30,000/– யை மூன்று நபர்கள் வீட்டின் பூட்டை உடைத்து திருடிக்கொண்டு சென்றுவிட்டதாக எனக்கு போன் மூலம் தகவல் கூறினார். பின்னிட்டு 22.05.2024 ஆம் தேதியன்று நான் எனது மாமியார் வீட்டிற்கு செல்லும்போது மூலனூர் ரோடு கரட்டுப்பாளையம் அருகே காலை 9.30 மணியளவில் போலீசார் வாகன தணிக்கை செய்யும்போது மூன்று நபர்களை பிடித்து என் முன்னிலையில் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது அந்த மூன்று நபர்களும் அவர்கள் பெயர், முகவரியை மாற்றி மாற்றி கூறி பின்னிட்டு தனது பெயர்களை பாலாஜி, தினேஷ்குமார், கோபி என்று கூறினார்கள். பணம் ரூ.1,20,000/– திருடியதாகவும் அதில் மூவரில் ஒருவரான ஆஜர் எதிரி பாலாஜி ரூ.50,000/– எடுத்ததாகவும், அதில் ரூ. 20,000/– செலவு செய்துவிட்டதாகவும் கூறினார். மற்ற இரண்டு நபர்களும் தலா ரூ.40,000/– திருடியதாகவும் அதில் இரண்டு நபர்களும் தனித்தனியாக ரூ.15,000/– செலவு

செய்ததாகவும் கூறினார்கள். செலவு செய்தது போக பாக்கி ரூ.80,000/– மட்டும் இருப்பதாக போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமுலங்களை போலீசார் என் முன்னிலையில் பதிவு செய்து என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் அ.சா.ஆ.2, 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரிகளிடம் இருந்து என் முன்னிலையில் தனித்தனியாக கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.80,000/– யை போலீசார் கைப்பற்றுதல் மகஜர்கள் தயார் செய்து என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜதில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகஜர்கள் அ.சா.ஆ.5, 6 மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னிட்டு எதிரிகள் மூவரும் திருட பயன்படுத்திய பல்சர் இருசக்கர வாகனத்தை போலீசார் பறிமுதல் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம்தான் போலீசார் சம்பவத்தின் போது எதிரிகளிடம் கைப்பற்றிய வாகனம் ஆகும். **வாகனம் அடங்கிய புகைப்படம் (2 எண்ணிக்கைகள்) அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

அ.சா.1 எனது மாமியார் என்றால் சரிதான். பணம் காணாமல் போன அன்று புகாரினை காவல் நிலையத்தில் நான்தான் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் ஒப்புதல் வாக்குமூல தேதியன்று வழக்கு சம்பந்தமாக நானும், சாட்சி பிரதீப்குமாரும் வெள்ளகோவில் உதவி ஆய்வாளர் அவர்களுடன் வழக்கு சம்பந்தமாக எதிரிகளை தேடிக்கொண்டிருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பணம் காணாமல் போன 13.05.2024 ஆம் தேதியன்று நானும் பிரதீப்குமாரும் எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு நீதிமன்றத்தின் மூலம் சார்பு செய்யப்பட்ட நகலில் உள்ள 13.05.2024 ஆம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். இரண்டாவது கையொப்பம் பிரதீப்குமாருடையது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எத்தனை போலீசார் இருந்தார்கள் என்றால் ஒரு காவல், ஒரு உதவி ஆய்வாளர் இருந்தார். அவர்கள் இருவரும் இருசக்கர வாகனத்தில்

வந்தார்கள் என்றால் சரிதான். அவர்களிடம் உபகரணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் தனித்தனியாக நோட்டில் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். கரட்டுப்பாளையத்தில் வைத்து போலீசார் டைப் செய்துகொண்டார்கள். அருகில் உள்ள ஜெராக்ஸ் கடையில் பிரண்ட் எடுத்தார்கள். போலீசாரிடம் எந்த உபகரணங்களும் இல்லை என்று கூறிவிட்டு தற்போது வழக்கிற்காக உபகரணங்கள் இருந்து அதில் டைப் செய்து கொண்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நோட்டில் எழுதிக்கொண்ட பேப்பரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் ஜெராக்ஸ் எடுத்த பேப்பரில் கையொப்பம் செய்தேன். நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் 6 கையொப்பங்கள் செய்தேன். கரட்டுப்பாளையம் என்பது ஒரு சிறய ஊர் என்றால் சரிதான். எந்த கடையில் ஜெராக்ஸ் எடுத்தார்கள் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். கரட்டுப்பாளையத்தில் எத்தனை மணி நேரம் இருந்தோம் என்றால் காலை 9.30 மணியில் இருந்து மதியம் 2.00 மணி வரை இருந்தோம். நான் கரட்டுப்பாளையம் செல்வதற்கு முன்பாகவே எதிரிகளை பிடித்து வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் சென்ற பின்னர்தான் பிடித்தார்கள். முதலில் யாரை விசாரணை செய்தார்கள் என்றால் பாலாஜியை விசாரணை செய்தார்கள். இரண்டாவது தினேஷ்குமார் மூன்றாவதாக கோபியை விசாரணை செய்தார்கள். நான் 6 கையொப்பங்கள் செய்த தாளில் போலீசார் என்னென்ன எழுதிக்கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது அ.சா.1 எனது மனைவியின் தாயார் என்பதால் அவருக்கு ஆதரவாக சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து எதிரிகளை கையொப்பம் செய்யவில்லை என்றும் அவர்கள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.26 19:05:50 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்